රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

அரசாங்க தகவல் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களையும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் பாராளுமன்றத்திற்கு சமர்பித்தல்.

Department of Government Information

Submission of Observations of Hon Minister And Steps Taken With Regard To The Reports Tabled By The Committee On Public Accounts In Terms of Standing Order No-119(4)

இலக்கம் 119 (4) நிலையியற் கட்டளைக்கு அமைவாக பாராளுமன்ற அரசாங்கக் கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அவதானிப்பு மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை சமர்ப்பித்தல்

பாராளுமன்றம் தொடர் இலக்கம் : 183

நிறுவனத்தின் பெயர் : அரசாங்க தகவல் திணைக்களம்

2020ம் ஆண்டுக்கான நிதி மற்றும் செயற்பாட்டு மதிப்பிட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடு	குறைபாடுகளை சரி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை / தற்போதைய நிலைமை
01. சேதங்கள் தொடர்பான பதிவுகள் புதுப்பிக்கப்படவில்லை.	2022.12.31 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது.
02. கணக்காய்வாளர் நாயகத்தினால் முன்வைக்கப்பட்டிருந்த அனைத்து கணக்காய்வு வினவல் தொடர்பிலும் ஒரு மாத காலத்தினுள் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	கொவிட் தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட அவசர நிலையினால் குறித்த கணக்காய்வு வினவல்களுக்கு ஒருமாத காலப்பகுதியினுள் பதிலளிக்க முடியாது போனது. தற்போது உரிய திகதிக்குள் கணக்காய்வு வினவல்களுக்கு பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
03. 2018ம் ஆண்டு 19ம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவின் அடிப்படையில் 2018.08.01ம் திகதிக்கு பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதியொன்று முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இன்மையால் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை.
04. மு.ரெ. 134 (2), மு.ரெ. 134 (3) அடிப்படையில் உள்ளக கணக்காய்வு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தினுள் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இன்மையால் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் வெளியிடப்படவில்லை.
05. 2016.03.31ம் திகதிய 5/2016ம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் அமைவாக பொருட்கள் தொடர்பான கணக்கெடுப்பினை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையொன்று கணக்காய்வாளர்	2020.12.31ம் திகதி உரிய பொருட்கள் தொடர்பான கணக்கெடுப்பு அறிக்கை கணக்காய்வாளர் நாயகத்திற்கு 2022.02.25ம் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.	
06. வருடாந்த பொருட்கள் தொடர்பான கணக்கெடுப்பிலிருந்து வெளியான மேலதிகம், இன்மை தொடர்பான சிபார்சுகளையும், ஏனைய சிபார்சுகளையும் உரிய காலப்பகுதியினுள் நடைமுறைப்படுத்தப்படாமை.	2022ம் திகதிக்கு பொருட்கள் தொடர்பான கணக்கெடுப்பினை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
07. 2016.12.29ம் திகதிய 2016/30ம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைவாக நிறுவனத்திற்குரிய வாகனங்களில் எரிபொருள் எரிப்பு வீதம் தொடர்பான சோதனைகள் எதுவும் செய்யப்படவில்லை.	2020, 2021ம் ஆண்டுகளுக்காக வாகனங்களின் எரிப்பு வீதம் தொடர்பிலான சோதனைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே அதனை மேற்கொள்ளமுடியவில்லை. 2023ம் ஆண்டில் அடுத்து வருகின்ற காலப்பகுதிக்குள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
08. வங்கி சமரச அறிக்கையிலிருந்து வெளிப்படுத்தப்பட்ட சீர்செய்யப்பட்டிருக்க வேண்டிய நிலைவைகள் யாவும் மு.ரெ. அடிப்படையில் ஒரு மாதத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	தீர்க்கப்படவில்லை.
09. மு.ரெ. 94 (1) இற்கு இணங்க செலவுத் தலைப்பொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த நிதியினை பயன்படுத்தியதன் பின்னர் மிகுதியாக இருந்த நிதியின் அளவானது அங்கீகரிக்கப்பட்ட அளவினையும் கடந்து பத்திரங்கள் செய்யப்பட்டிருந்தன.	கொவிட் தொற்று பரவல் காரணமாக ஏற்பட்ட அவசர நிலைமையினால் தினைக்களத்தின் பணிகளை நிறைவேற்றும் போது சில செலவுத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளை தாண்டி இணக்கப் பொறுப்புக்களை செய்ய வேண்டியிருந்தது. எனினும், அதன் பின்னரான வருடங்களில் தவிர்க்க முடியாத காரணங்களை தவிர்ந்து ஒதுக்கப்பட்ட நிதியினை தாண்டாத விதத்தில் இணக்கப் பொறுப்புக்களை ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தொடர்ந்தும் இந்த நிலைமையினை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.
10. வருடமொன்றிற்கும் மேலான காலத்திலிருந்து தொடர்ந்து வருகின்ற கடன் நிலுவை தொடர்ந்தும் காணப்பட்டது.	சேவையினை விட்டு விலகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவிடப்பட வேண்டிய கடன் நிலுவைகள் • ஓ.சி.எல். டி சில்வா அவர்கள் கடன் நிலுவை – சொத்துக் கடன் ரூ. 123,475.00 • எம். ஆரியரத்ன அவர்கள் கடன் நிலுவை – அனர்த்த கடன் ரூ. 56,265.00

	1997ம் ஆண்டில் சேவையினை விட்டு விலகிச் சென்ற ஓ.சி.எல். டி சில்வா அவர்களின் சொத்துக் கடன் நிலுவையான ரூ. 123,475.00 தொகையையும், 2001ம் ஆண்டில் சேவையினை விட்டு விலகிச் சென்ற எம். ஆரியரத்ன அவர்களின் அனர்த்த கடன் நிலுவையான ரூ. 56,265 தொகையையும் அறவிட்டுக் கொள்வது தொடர்பான தகவல்கள் மற்றும் ஆவணங்களின் பிரதிகள் சட்டமாதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் உரிய ஆலோசனை கிடைக்கப்பெற்றவுடன் அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.
11. பொது வைப்பு கணக்கில் காலாவதியான வைப்புகள் தொடர்பில் மு.ரெ. 571 பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.	காலாவதியான வைப்பு தொகையாக காணப்படுவது புதிய ஊடக மத்திய நிலைய கட்டிடத்தின் கட்டுமான பணிகளுக்குரிய ஒப்பந்தத்துக்கு உரித்தான தடுத்து வைத்துக் கொண்டிருக்கும் பணமாகும். நட்டத்தினை அறிவிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற பணமானது விடுவிக்கப்படவில்லை.
12. மு.ரெ. 371 பிரகாரம் வெளியிடப்பட்ட உடனடி இடைக்கால பணிகள் முடிவடைந்து ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்திற்கு குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பணிகளின் தன்மையின் அடிப்படையில் அந்த பணிகளை நிறைவேற்றும் போது ஆவணம் படங்களை தயாரித்தல் போன்ற விடயங்களுக்காக சிறிது காலம் செல்வதுடன் அந்த காரியம் நிறைவடையும் வரை பெறப்பட்ட முற்கொடுப்பினவினை திரும்ப செலுத்த முடியாத நிலை உருவாகின்றது. பல்வேறு சந்தர்ப்பங்களில் காரியத்திற்குரிய செலவுகள் முடிவடைந்தவுடன் மிகுதித் தொகையினை திரும்பச் செலுத்தும் நடவடிக்கை இடம்பெறுவதுடன் ஆவணப் படங்களை தயாரித்தல் போன்ற விடயங்களில் இறுதி தயாரிப்பினை வெளியிடுவதற்கு மேலதிக காலம் செலவிடப்படுவதனால் பற்றுச் சீட்டுகளை சேகரித்து முற்கொடுப்பினை மீள திரும்பச் செலுத்தும் வவுச்சர்களை ஒப்படைப்பதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது. மேலும், தொடர்ச்சியாக முற்பணம் பெற்றுக் கொண்ட ஆவணங்களை பரிசீலித்து திரும்ப செலுத்தப்படாத முற்பணங்களை செலுத்துமாறு உரிய அதிகாரிகளை அறிவுறுத்தி தொடர்ந்தும் இவ்வாறான நிலைமை உருவாகாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
13. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய செயல்திறன் அறிக்கையானது உரிய திகதிக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2020 மற்றும் 2021ம் ஆண்டிற்கான செயல்திறன் அறிக்கை கணக்காளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2022ம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
14. நிறுவனமானது தமது விடயதானத்தின் அடிப்படையில் நிலைபேறான நோக்கங்களை அடையாளங் கண்டிருக்கவில்லை.	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்காண்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு, அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
15. இனங்காணப்பட்ட நிலைபேறான நோக்கங்களை அடைந்துக் கொள்வதனை பரிசீலிப்பதற்காக செயற்றிறன் இலக்குகள் வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற் கூறப்பட்ட 14இன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

16. நிறுவனத்தின் நிலைபேறான நோக்கங்களை அடைந்துக் கொள்வதற்குரிய தரப்பினரை இனங்கண்டிருக்கவில்லை.	மேற் கூறப்பட்ட 14இன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
17. 2018.04.27ம் திகதிய MSDW/08/65 ம் இலக்க சுற்றறிக்கையின் விதப்புரைகளுக்கு அமைவாக நிறைவேற்றப்பட் வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்வதற்காக நியமிக்கப்பட வேண்டிய பிரதிநிதிகள் இருவர் தொடர்பான விபரங்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.	மேற் கூறப்பட்ட 14இன் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
18. பிரஜைகள்/ சேவைப் பெறுநர்கள் பிரகடனத்தினை உரிய முறையில் தயாரித்து செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இதுவரை தயாரிக்கப்படவில்லை.
19. நிறுவனத்தின் பிரஜைகள்/ சேவைப் பெறுநர்கள் தொடர்பான பிரகடனத்தினை செயற்படுத்துவது தொடர்பில் மேற்பார்வை மற்றும் மதிப்பிடுவதற்காக நிறுவனத்தினால் செயற்திட்டமொன்று தயார்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இதுவரை தயாரிக்கப்படவில்லை.
20. பொது நிர்வாக விதிகளுக்கு அமைவாக உரி முறையில் தயாரிக்கப்பட்ட மனித வள திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இதுவரை தயாரிக்கப்படவில்லை.
21. தயாரிக்கப்பட்ட மனித வள திட்டத்தின் மூலம் ஒரு பணியாளருக்காக குறைந்த பட்சம் வருடத்திற்கு 12 மணித்தியாலங்கள் குறைந்த பயிற்சியாவது வழங்கப்பட்டிருக்கவில்லை.	இதுவரை தயாரிக்கப்படவில்லை.
22. முழு பணியாளர் , தொகுதியினரும் உள்ளடங்கும் வகையில் செயற்றிறன் ஒப்பந்தமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	இதுவரை ஒப்பந்தமானது கைச்சாத்திடப்படவில்லை.

23. மனித வள அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கவும், திறன் விருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்காக நிறுவனத்தினுள் சிரேஷ்ட அதிகாரியொருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை.	இதுவரை பெயரிடப்படவில்லை.
24. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் பெற்றுக் கொடுக்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் 50% க்கும் குறைவான மட்டத்திலேயே காணப்பட்டது.	செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக செலவுகளை இல்லாமல் செய்யவேண்டிய நிலை உருவாவதால் முடியுமான வகையில் பயிற்சி அவகாசங்கள் வழங்கப்படுகின்றது.
25. கணக்காய்வாளர் நாயகத்தினால் பந்திகளில் சுட்டிக் காட்டியுள்ள குறைபாடுகள்/ பிழைகள் திருத்தப்பட்டிருக்கவில்லை.	நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையின் காரணமாக கணக்காய்வாளர் நாயகம் அவர்கள் சுட்டிக்காட்டி இருந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாது போனது. எதிர்காலத்தில் இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
26. வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக குறைந்த பட்சம் வெளியீட்டு குறிகாட்டிகள் மூன்றினை இனங்கண்டு பதியப்பட்டிருக்கவில்லை.	2020ம் ஆண்டு வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக வெளியீட்டு குறிகாட்டிகள் 03 இனங்காணப்பட்டுள்ளன.
27. நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் தொடர்பிலான பிரதான மூன்று குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.	இது தாமதத்தின் காரணமாக குறிப்பெடுப்பதற்கு முடியாமல் போயுள்ளதுடன் 2020ம் ஆண்டிற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள் தொடர்பில் 03 பிரதான குறிகாட்டிகளுக்கும் மேலதிகமாக (விசேடமாக 18 குறிகாட்டிகளுக்கு மேல்) இனங்காணப்பட்டுள்ளது.
28. இனங்காணப்பட்ட முதல் செயற்றிறன் குறிகாட்டியினை அடைதல் 50% க்கும் குறைந்த அளவில் காணப்படல். இனங்காணப்பட்ட இரண்டாவது செயற்றிறன் குறிகாட்டியினை அடைதல் 50% க்கும் குறைந்த அளவில் காணப்படல். இனங்காணப்பட்ட மூன்றாவது செயற்றிறன் குறிகாட்டியினை அடைதல் 50% க்கும் குறைந்த அளவில் காணப்படல்.	இனங்காணப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள் பெரும்பாலானவற்றில் (14ல்) 50% - 100% அடைவு மட்டத்தினை அடைந்துள்ளன. ஏனைய குறிகாட்டிகள் நிதி மட்டுப்படுத்தப்பட்டதன் விளைவு மற்றும் கொவிட் தொற்று காரணத்தினால் அடைவு மட்டத்தினை அடைந்து கொள்வதற்கு தடையாக இருந்தன.

දිනිත් චින්තක කරුණාරත්න
රජයේ ප්‍රවෘත්ති අධ්‍යක්ෂ ජනරාල්
රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව
කොළඹ 05.